119—

அகழி அமைத்தல்

***43700—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலை அருகே உள்ள கம்பம் ஒன்றியத்தில் வன விலங்குகள் தோட்டப் பகுதியில் நுழைவதைத் தடுப்பதற்கு அகழி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அருகேயுள்ள கம்பம் ஒன்றியத்தில் வன விலங்குகள் வனப் பகுதியைவிட்டு தோட்டப் பகுதியில் நுழைவதைத் தடுக்கும் வகையிலும், விவசாய நிலங்களில் பயிர்ச் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டும் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, 2013-2014 ஆம் ஆண்டில் 48 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 95 இலட்சம் செலவிலே யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 வருடங்களில் இந்தச் சபையில் கேள்வி நேரத்தின்போது நான் அறிந்துகொண்டது என்னவென்றால், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கேள்வி கேட்கின்றபோதே, அதற்குண்டான திட்டத்தை தீட்டி முன்பே நடைமுறைப்படுத்துகின்ற ஒரே அரசு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்*

2015 ஏப்ரல் 1]

அரசுதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் கூறுகின்ற நல்ல செய்தியாகும்.

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, 48 கிலோ மீட்டர் தூரம் அகழிகள் வெட்டியதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேவேளையில், இடையில் பாறைகள் இருப்பதால் அந்த இடங்களில் HITACHI இயந்திரம் மூலமாகத் தோண்ட முடியாத ஒரு சூழ்நிலையில், அவற்றை வெடிவைத்துத் தகர்க்க வேண்டுமென்ற ஒரு திட்டம் தங்களிடத்திலே இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் வெடிவைத்துத் தகர்த்து, அதையும் அகழிகளாக வெட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் மனித-வன உயிரினங்கள் மோதலைத் தடுக்கவும், வன உயிரினங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில், பயிர்ச் சேதத்தைத் தவிர்க்கவும் பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

அதன் அடிப்படையிலே, 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தமிழகத்திலுள்ள 14 மாவட்டங்களிலே 1,895.64 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 58.12 கோடி செலவிலே யானைகள் புகா அகழிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இதுதவிர 2011 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை, 185.58 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 334.80 இலட்சம் செலவில் சூரிய மின் வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், வன விலங்குகள் காட்டைவிட்டு வெளியே வராவண்ணம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளும் கடந்த நான்கு ஆண்டுகளாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய இடையிலே

இருக்கின்ற பாறைப் பகுதியில் வேட்டு வைத்து அந்த இடங்களிலே அகழிகள் வெட்ட முடியாத காரணத்தினால்—ஏனென்றால் வேட்டு வைத்தால் வன விலங்குகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால்—அந்தப் பகுதியிலே தடுப்புச் சுவர்கள் எழுப்பி, அங்கே பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பு வேலி அமைப்பது நல்ல திட்டம். அதேவேளையில், எங்கள் கம்பம் valley பகுதியில்தான் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, வன விலங்குகள் அதிகமாக இருக்கின்றன. அதை வனத் துறையினர் பார்க்கின்ற வகையில், watch tower அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதைப்போன்றும், பல்வேறு கோரிக்கைகளின் அடைப்படையிலும் பல்வேறு இடங்களில் Watch Tower-கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வேட்டைத் தடுப்புக் காவலர்கள் முகாம்கள் அமைக்கப்பட்டு, அவை நல்ல முறையிலே கண்காணிக்கப்பட்டு வரப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிகாட்டுகின்ற மேற்கூறிய பகுதியில் தேவையின் அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூறிக்கொள்கின்றேன்.